Registered as a News Paper

பக்கங்கள் 04

விலை: ரூபா 5-00

நல்லூர் ... நூலகம்
... றம்
யாழ்ப்பாணம்

ஈழநாதம்

THE EELANAATHAM

Popeles Daily

மக்கள் தினசரி

நாதம் 04 | சித்திரை 20 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | [03-05-93] | திங்கட்கிழமை | ஓசை 74

## மாதாந்த சேவைக்கட்டணம் வங்கி அறவிட நடவடிக்கை

மக்கள் வங்கியில் நடைமுறைக் கணக்குகளை வைத்திருப்போர் தமதுகணக்கில் வங்கி குறிப்பிடும் மீதிகளுக்குகுறைவாக வைத்திருந்தால் அவர்களிடமிருந்து மாதாந்த சேவைக் கட்டணம் அறவிடப்படும் என யாழ். மக்கள் வங்கி சகல வாடிக்கையாளர்களுக்கும் கடிதம் மூலம் தெரியப்படுத்தி உள்ளது. இதன்படி தனியார் கணக்குகளில் குறைந்த பட்சமீதி ரூபா 1000ஆகவும், தனியார்வியாபாரக் கணக்குகளின் குறைந்த பட்சமீதி ரூபா 4000ஆகவும், வியாபாரக்கணக்குகளைவைத்திருப்போரின் குறைந்தபட்சமீதி ரூபா 4000ஆகவும், கூட்டுத்தா ப ன ங்களின் குறைந்தபட்ச மீதி ரூபா 7500 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு குறைந்தபட்ச மீதியைக் கொண்டிராத தனியார் கணக்கு வைத்திருப்போ (4ஆம் பக்கம் பார்க்க)

# சிறிலங்காவின் அடுத்த ஜனாதிபதி யார்?


# நாளை பாராளுமன்றத்தில் ஆராயப்படும்

(கொழும்பு)

சிறிலங்காவின் அடுத்த ஜனாதிபதியைத் தெரிவுசெய்வது குறித்து நாளை கூடவுள்ள விசேட பாராளுமன்றக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது. ஜனாதிபதி பிரேமதாசாவின் கொலையைத் தொடர்ந்து இவரதுபதவிக்காலம் முடியும் வரை அடுத்த ஜனாதிபதியாக யாரைத் தெரிவுசெய்வது என்பது குறித்தே பாராளுமன்றம் விவாதிக்கும்.

சிறிலங்காவின் அரசியல் யாப்பின்படி ஒரு ஜனாதிபதி தமது பதவிக்காலம் முடிவதற்குள் இறந்தால் அடுத்த ஜனாதிபதியை இரகசிய வாக்கெடுப்பின் மூலம் பாராளுமன்றமே தெரிவுசெய்யும் இதில் ஜனாதிபதி வேட்பாளராக ஒருவரே போட்டியிடும் பட்சத்தில் அவர் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்படுவார் என்றும் அவ்வாறு இல்லாது ஒன்றுக்குமேற்பட்டவர்கள் போட்டியிடும்பட்சத்தில்அடுத்த நாற்பத்தியெட்டு மணிநேரத்திற்குள் அடுத்த ஜனாதிபதி யார் என்பதை இரகசிய வாக்கெடுப்பின்மூலம் பாராளுமன்றம் தெரிவுசெய்யும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இவ் ஜனாதிபதித் தெரிவில் பாராளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையைக் கொண்டுள்ள ஐ. தே. கட்சியின் வேட்பாளரே ஜனாதிபதியாகத்தெரிவுசெய்யப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. புதிய ஜனாதிபதி 1994 இறுதிவரை பதவிவகிக்கலாம்,



ஜனாதிபதி பிரேமதாசாவுடன் நேற்று முன்தினம் கொல்லப்பட்ட சிலரின் சடலங்களை படத்தில் காணலாம்.

## மாகாணசபை தேர்தல் நடக்கும்

(கொழும்பு)

மாகாணசபை தேர்தல்கள் திட்டமிட்டபடி 17ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும் என தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி. சில்வா நேற்று பிற்பகல் அறிவித்தார்.

## பத்திரிகைகள் வெளிவரவில்லை

(கொழும்பு]

கொழும்பு நகரிலிருந்து வெளியிடப்படும் வீரகேசரி மற்றும் தினகரன் ஆகிய நாளிதழ்கள் நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற சம்பவத்தின் காரணமாக

# ஐ. தே. க. வேட்பாளராக டி. பி. விஜயதுங்க தெரிவு

## கட்சி குழுக்கள் தீர்மானம்

[கொழும்பு]

சிறிலங்காவின் புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான இரகசிய வாக்கெடுப்பு நாளை சிறிலங்கா பாராளுமன்றத்தில்இடம்பெறவுள்ளது

ஜனாதிபதி பதவிக்காலத்தின் எஞ்சிய பகுதியை பதவிவகிக்க ஐ தே. க. அதன் வேட்பாளராக பதில் ஜனாதிபதி டி. பி.

குழு என்பன நேற்று நடத்திய ... தீர்மானம் ஏகமனதாக எடுக்கப்பட்டது.

டாக்டர் எம். சி. எம். கலீல் தலைமையிலான கட்சிக் கூட்டத்தில் விஜேதுங்கவின் பெயரை அமைச்சர் சிறிசேன கூரே முன்மொழிய அமைச்சர் சாகுல் ஹமீட் வழிமொழிந்தார். கட்சியின் இந்தக் கூட்டம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. ...

பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

விஜேதுங்கவின் நியமனப் பத்திரத்தை பாராளுமன்றச் செயலாளர் பெற்றுக் கொண்டுள்ளார்.

# வடக்கு-கிழக்கு துருப்புக்கள் தெற்கிற்கு விரைவு



ஜனாதிபதி பிரேமதாசாவுடன் நேற்று முன்தினம் கொல்லப்பட்ட சிலரின் சடலங்களை படத்தில் காணலாம்.

...எதிர்பார்க்கப்படுகிறது. புதிய ஜனாதிபதி 1994 இறுதிவரை பதவிவகிக்கலாம்,

# ஐ. தே. க. வேட்பாளராக டி. பி. விஜயதுங்க தெரிவு

## கட்சி குழுக்கள் தீர்மானம்

[கொழும்பு]

சிறிலங்காவின் புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான இரகசிய வாக்கெடுப்பு நாளை சிறிலங்கா பாராளுமன்றத்தில்இடம்பெறவுள்ளது

ஜனாதிபதி பதவிக்காலத்தின் எஞ்சிய பகுதியை பதவிவகிக்க ஐ தே. க. அதன் வேட்பாளராக பதில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவை நியமிக்கமுடிவு செய்துள்ளது. ஐ. தே. க. செயற்குழு - பாராளுமன்றக் குழு என்பன நேற்று நடத்திய தீர்மானம் ஏகமனதாக எடுக்கப்பட்டது,

டாக்டர் எம். சி. எம். கலீல் தலைமையிலான கட்சிக் கூட்டத்தில் விஜேதுங்கவின் பெயரை அமைச்சர் சிறிசேன கூரே முன்மொழிய அமைச்சர் சாகுல் ஹமீட் வழிமொழிந்தார். கட்சியின் இந்தக் கூட்டுக்கூட்டம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

விஜேதுங்கவின் நியமனப் பத்திரத்தை பாராளுமன்றச் செயலாளர் பெற்றுக் கொண்டுள்ளார்.

## மாகாணசபை தேர்தல் நடக்கும்

(கொழும்பு)

மாகாணசபை தேர்தல்கள் திட்டமிட்டபடி 17ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும் என தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி. சில்வா நேற்று பிற்பகல் அறிவித்தார்.

## பத்திரிகைகள் வெளிவரவில்லை

(கொழும்பு]

கொழும்பு நகரிலிருந்து வெளியிடப்படும் வீரகேசரி மற்றும் தினகரன் ஆகிய நாளிதழ்கள் நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற சம்பவத்தின் காரணமாக நேற்று வெளியிடப்படவில்லை என்று தெரியவருகிறது. வீர

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு-கிழக்கு துருப்புக்கள் தெற்கிற்கு விரைவு

(கொழும்பு)

பிரேமதாசா குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டதை தொடர்ந்து தலைநகர் கொழும்பில் பாதுகாப்பை பலப்படுத்தும் வகையில் வடக்கு கிழக்கு யுத்த முனையிலிருந்து பெருமளவு துருப்புகள் கொழும்பிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

படையினரின் ஒரு பகுதி கொழும்பிற்கு திருப்பி அழைக்கப்பட்டிருப்பதனால் வடக்கு கிழக்கில் புலிகளுக்கு எதிரான தற்போதைய இராணுவ நடவடிக்கையில் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது என இராணுவ அதிகாரிகள் குறிப்பிட்டனர். வாபஸ் பெறப்பட்ட படையினருக்கு பதிலாக ரிசேர்வ் படைகள் பணியில் அமர்த்தப்பட்டிருப்பதாகவும் அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை கொழும்பிலும் புறநகர் பகுதியிலும் படையினரின் கடுமையான தேடுதல் நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. வீதிகளில் தடை போடப்பட்டு பொலிசாரும் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர். கொழும்பிலும் ஏனைய பகுதிகளிலும் நேற்றுவரை பெரிதாக வன்முறைச் சம்பவங்கள் ஏதும் இடம்பெறவில்லை என செய்திகள் தெரிவித்தன.

## வன்முறையை அடக்க தீவிர பாதுகாப்பு

[கொழும்பு]

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் கொலையை தொடர்ந்து ஏற்படக்கூடிய வன்முறைச் சம்பவங்களை தடுப்பதற்காக கொழும்பு நகரிலும் ஏனைய பகுதிகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கொழும்பிலும் ஏனைய பகுதிகளிலும் கட்டடங்களில் வெள்ளைக் கொடி பறக்கவிடப்பட்டுள்ளதுடன் அரசாங்க, கூட்டுத்தாபன வளவுகளிலும். அமைச்சு அலுவலகங்களிலும் சிறிலங்கா தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ளது.

## ஜனாதிபதிப் பதவிக்கு ஆதரவு திரட்டும் ரணில்

(கொழும்பு)

பிரேமதாசாவின் மறைவைத் தொடர்ந்து புதிய ஜனாதிபதி ஒருவரை தெரிவுசெய்யவேண்டியுள்ள இந்நிலையில் ஆளும் ஐ.தே.க. வினுள் இப்போதே ஆதரவுகோரும் போட்டிகள் ஆரம்பித்துவிட்டதாக ஏ.எவ். பி. செய்தி ஸ்தாபனம் தெரிவித்தது.

அடுத்த ஜனாதிபதியாக வரும் முயற்சியில் அமைச்சர் ரணில் விக்ரமசிங்க தனது ஆதரவாளர்களைத் திரட்டி வருவதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை ஐ. தே. க. புதிய தலைவரைத் தெரிவு செய்வதில் உதவுவதற்காக முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா தனது இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்றுக் கொழும்பு திரும்பினார்.

# திருமலையில் மின்வேக அதிரடி; இராணுவ முகாம் தகர்ப்பு

## ஐந்து படையினர் பலி; பலர் காயம்

(திருக்கோணமலை]

திருமலை மாவட்டத்தில் அமைந்திருந்த சிறிலங்கா இராணுவ முகாம் ஒன்றின் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் திடீர் மின்னல்வேக அதிரடித் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர்.

இத் தாக்குதலினால் ஐந்து சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன், முகாம் முற்றாக அழிக்கப்பட்டது. பெருமளவு ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இத் தாக்குதலின் போது புலிகள் தரப்பில் இருவர் வீரச்சாவடைந்தனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை 2-30 மணியளவில் திருமலை மாவட்டம் கோமரசங்கடவளவைக்கும், மாகோநுவேவைக்கும் இடையிலுள்ள பம்புருஸ்கவெவ என்ற இடத்தில் அமைந்திருந்த சிறிலங்கா இராணுவ முகாம் மீதே விடுதலைப்புலிகள் மின்னல்வேக தாக்குதலை மேற்கொண்டனர்.

சுமார் 50 இராணுவத்தினரைக் கொண்டிருந்த இம் முகாம் மீது விடுதலைப்புலிகள் நடாத்திய தாக்குதலினால் சுமார் 15நிமிடங்களில் முகாம் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் வந்தது.

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் கோமரசங்கடவளவைக்கும், மாகோநுவேவைக்குமிடையில் உள்ள பம்புருஸ்கவெவ எனும் இடத்தில் அமைந்திருந்த சிறிலங்கா இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரங்கள் வருமாறு;

| | | |
|---|---|---|
| ஏ.கே.எல் எம் ஜி. | — | 01 |
| ரி. 81 ரகத் துபபாக்கி | — | 01 |
| ரி 56-1 ரகத் துப்பாக்கிகள் | — | 03 |
| நடுத்தர ரவைகள் | — | 4824 |
| எம். 75 ரகக் கைக்குண்டு | — | 02 |
| ஜே. ஆர். ரகக் கைக்குண்டு | — | 01 |
| ஏ.கே எல்.எம்.ஜி ரவைக்கூடுகள் | — | 04 |
| ரி. 81 ரக ரவைக் கூடுகள் | — | 07 |
| ரி. 56 ரக ரவைக் கூடுகள் | — | 12 |
| ஏ. கே. எல். எம். ஜி. லிங் | — | 94 |
| ஏ. கே. எல். எம். ஜி. கோல்சர் | — | 10 |
| ஏ. கே. கோல்சர் | — | 08 |
| தலைக்கவசம் | — | 07 |
| சப்பாத்து | — | 30 சோடி |
| கிற் பாக் | — | 20 |
| தண்ணீர்க்கான் | — | 08 |
| தொப்பி | — | 13 |
| மில்ரி பெல்ற் | — | 16 |
| தண்ணீர்க்கான் கோல்சர் | — | 27 |

## 2போராளிகள் வீரச்சாவு

திருமலை பம்புருஸ்கவெவ சிறிலங்கா இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் நேற்று முன்தினம் தாக்குதலை மேற்கொண்டு முகாம், காவலரண்களை தகர்த்தெறிந்த வெற்றிகரத் தாக்குதலின்போது இரு புலிகள் வீரச்சாவடைந்தனர்.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## தற்கொலைப்படை வீரர் சைக்கிளில் வருவாரென நாம் எதிர்பார்க்கவில்லை

[கொழும்பு]

தற்கொலைப்படை வீரர்கள் காரில் வரக்கூடும் என நாம் எதிர்பார்த்திருந்த வேளையில் தற்கொலை வீரன் தானே வெடிகுண்டை சுமந்து கொண்டு சைககிளில் வநதிருக்கிறார் என இராணுவ வட்டாரங்கள் நேற்று கருத்து தெரிவித்திருந்ததாக வெரித்தாஸ் வானொலி கூறியது.

தலைநகர் கொழும்பினுள் வெடிமருந்து வாகனங்கள் நுழைந்துள்ளதாக முன்னரே எச்சரித்திருந்த போதிலும் இந்த படுகொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை துரதிஷ்டவசமானது என்றும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## தற்கொலைவீரனின்கழுத்தில் சயனைட் பகுதிகளாம்

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் கொலைக்கு விடுதலைப் புலிகளே காரணம் என தெரியவந்துள்ளதாக பொலிஸ் புலனாய்வு துறையினர் தெரிவித்தனர்.

தற்கொலை படை வீரனின் உடலின் பகுதிகள் சில மீட்கப்பட்டுள்ளதாகவும் அவரின் கழுத்துப் பகுதியில் சயனைட் வில்லையின் பகுதிகள் காணப்பட்டதாகவும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த லயனல் குணதிலக நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இதேவேளை ஜனாதிபதி பிரேமதாசா மீது வெடிகுண்டு தாக்குதலை மேற்கொண்டவர்கள்குறித்தவிபரங்கள்பொதுமக்களிடம்கோரப்படுகிறது

இத்தகவலை ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் வெளியிட்டுள்ளது.

## சமரச முயற்சி

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசாவின் மறைவை தொடர்ந்து ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியில் ஏற்பட்டுள்ள கருத்து வேற்றுமையை நீக்கும் பொருட்டு சில ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்கள் தற்போது ஜனநாயக ஐக்கிய தேசியக் கட்சி தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியில இருந்து இவர்கள் விலகிசென்றமையினால் இவர்களை மீண்டும் இக்கட்சியில் இணைக்கும் ஒரு நடவடிக்கையாக இது இருக்கலாம் என பி. பி. ஸி. செய்தியாளர் ஜெஸ் பிற்றா சிங் தெரிவித்துள்ளார்

## ஜனாதிபதியின் மகள் திரும்பினார்

காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாசாவின் புதல்வியான திருமதி துலாஞ்சலி ஜெயக்கொடி நேற்றுக்காலை அமெரிக்காவிலிருந்து கொழும்பு வந்து சேர்ந்தார்.

## வரி விளம்பரம்

**பயிற்சி வினாத்தாள் (ஆண்டு 4,5)**

சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத்தரும் நிறுவனத்தால் நடாத்தப்படும் ஆண்டு 5 புலமைப்பரிசில் முன்னோடி வினாத்தாளும் ஆண்டு 4 பயிற்சிப் பரீட்சை வினாத்தாளும் (தமிழ், கணிதம், ஆங்கிலம்) 02 05 93 முதல் வெளியிடப் படுகிறதுவிடையளித்துதந்தால் திருத்திக் கொடுக்கப்படும், புதிய கல்வி நிலையம் 219· நாவலர் வீதி யாழ்ப்பாணம் (4800)

**தேவை**

5KV இற்கும் 10KV இற்கும் இடையே வலு உடையதும் டீசலில் இயங்கக் கூடியதுமான ஜெனரேற்றர் தேவை. தொடர்பு: நளினி கிறைண்டிங் மில் 730, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (4786)

**கசற் றேடியோக்களா! கடிகாரமா!!**

உங்கள் கடிகாரங்களையும் றேடியோக்களையும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள். டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம். கிளை கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-6541)

**முன்னோடி நூல்கள்**

அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் 'கெட்டிக்காரர்கள்' ''முதலாம் பிள்ளை'' 30= நூல்கள் முறையே இலங்கை வானொலி தமிழ்ச் சேவைத் தனி நாடகங்களின் முதலாம். இரண்டாம் தொகுதிகளாகும் இந்த 19 நாடகங்களையும் பலரும் மேடையில் நடித்து விட்டனர். (4799)

**ஒத்து மாறல்**

பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியர் கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு ஒத்துமாற (Mutual Transfer) விரும்புகிறார். தொடர்பு;- 40/4 கோவில் வீதி, சுண்டுக்குளி (4803)

**நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**

சுத்தஇன பொமனேரியன் நாய்க்குட்டிகள், 45 நாட்களான நிலையில் விற்பனைக்குண்டு முகவரி:- ஸிந்துஜா வைத்தீஸ்வரன், மானிப்பாய் ஆண்கள் பாடசாலை முன்பாக மானிப்பாய். (4805)

**பழைய பொருள்கள்**

உத்தரவாதத்துடன்

## அதிபர்கள் போட்டிப்பரீட்சை விரைவில் நடைபெறும்

அதிபர்களுக்கான போட்டிப் பரீட்சை மிக விரைவில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 1991-ம் ஆண்டிற்குப் பின்னர் இப் பரீட்சை இப்போது நடைபெறவிருப்பது குறிப்பிடத் தக்கது.

அதிபர் தரம் I, II, III, ஆகியவற்றிற்கே இப்போட்டிப் பரீட்சை நடைபெற விருப்பதாகவும் இதில் 33,000 ஆசிரியர்கள் கலந்து கொள்ள தகைமை பெற்றிருப்பதாகவும் மேலும் கூறப்படுகிறது. (நி)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்:
10-04-1943

மறைவு:
03-04-1993

அமரர் திருமதி
**இரத்தினம் அன்னம்மா**
(யோகம்)

ஸ்ரீமுகவருடம் சித்திரைத் திங்கள் 20-ம் நாள் (03 - 05 - 1993) இன்று முற்பகல் 11 00 மணியளவில் அமரர் திருமதி இரத்தினம் அன்னம்மா அவர்களின் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய கிரியைகளும் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரையும் அவ்வைபவத்தில் கலந்து, அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வீரபத்திரர் வீதி,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

இங்ஙனம்
கணவன்,
மக்கள்,
மருமக்கள்.

[4793]

## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் லயன்ஸ் கழக ஸ்தாபக உறுப்பினரும் இயக்குனர் சபை அங்கத்தவருமான

லயன் டாக்டர்
**இ. பாக்கியநாதன்**

அவர்கள் 2- 5- 93 ஞாயிற்றுக்கிழமை காலை திடீர் மரணம் எய்தியமை எமது கழகத்திற்குஒரு பேரிழப்பாகும்.

அன்னாரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதுடன், அவரை இழந்து ..., உறவினர். நண்பர்கள் யாவருக்கும் எமது கண்ணீர் அஞ்சலியை சமர்ப்பிக்கின்றோம்.

நல்லூர் லயன்ஸ் கழகம்
(4811)

## 4-வது ஆண்டு நினைவுதினம்

# கும்புறுமூலை இராணுவ முகாமில் பேருந்துகள்மீது நீண்ட சோதனை

(வாழைச்சேனை)

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு, திருக்கோணமலை போன்ற தூர இடங்களுக்கு செல்லும் பேருந்துகள் கும்புறுமூலை இராணுவ முகாமில் வைத்து இரண்டு மணி நேரத்துக்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டு சோதனையிடப்பட்ட பின்னரே பயணத்தை தொடர இராணுவத்தினர் அனுமதிப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகினறன.

மட்டக்களப்பு நகரில் இருந்து காலையில் புறப்படும் பேருந்துகள் ஒன்பது மணியளவில் கும்புறுமூலை இராணுவ முகாமை வந்தடையும் போதிலும் அங்கிருந்து பதினொரு மணிக்குப் பின்னரே பயணத்தைத் தொடர இராணுவத்தினர் அனுமதிக்கின்றனர்.

இத்தகைய கட்டுப்பாடு திடீரென புகுத்தப்பட்டிருப்பதால் கொழும்பு, திருமலை ஆகிய தூர இடங்களுக்குச் செல்லும் பயணிகள் பெரும் அசௌகரியங்களை அனுபவித்து வருவதாகவும் கூறப்படுகிறது இதேவேளை குறித்த சில பேருந்துகள் எந்த தாமதமுமின்றி பயணத்தை தொடர அனுமதிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

## மன்னாரில் மாவீரர் நினைவு நிகழ்வுகள்

(மன்னார்)

1985 தொடக்கம் 1992 வரையான காலப்பகுதியில் சித்திரை மாதத்தில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மன்னார் மாவட்ட மாவீரர்களை நினைவு கூரும் வீரவணக்க கூட்டமும், கலைநிகழ்ச்சிகளும் கடந்த புதனன்று மன்னாரில் இடம் பெற்றது.

கரபந்தாட்டம், வலைப் பந்தாட்டம் உதைபந்தாட்டம் போன்ற நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. இந் நிகழ்ச்சிகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது உலங்கு வானூர்தி ஒன்று வட்டமிட்டதைத் தொடர்ந்து மக்கள் பீதி அடைந்து காணப்பட்ட போதும் தொடர்ந்து நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

மாலை 7 மணியளவில் பிரதம விருந்தினர் மற்றும் மாவீரர்களின் பெற்றோர்கள் பான்ட் வாத்திய இசையுடன் அழைத்து வரப்பட்டனர். பிரதான ஈகைச்சுடரை திரு. கதிரவர்கள் ஏற்றிவைக்க மாவீரரின் படங்களுக்கு முன்பாக பெற்றோர் சுடர்களை ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து இடம்பெற்ற கூட்டத்திற்கு மன்னார் மாவட்ட மாணவரமைப்பு உதவிப் பொறுப்பாளர் ரவிராஜ் தலைமை வகிக்க பத்மநாதன், செல்வி இதயா, மடுப்பிரதேச அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் அல்வின், வன்னி, முல்லை மன்னார் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். முன்னதாக காலை ஒன்பது மணியளவில் நிகழ்ச்சிகளை மன்னார் மாவட்ட சிறப்புத் தளபதிஜான் தேசியகொடியை ஏற்றி ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.


தமிழ்த்தாய் புத்தகசாலையில்

இதோ!

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த
எமது அடுத்த தொகுதி புத்தகங்கள் விற்பனைக்குவந்துவிட்டன

குறைந்த விலை! நிறைந்த சேவை!

"தமிழ்த்தாய் புத்தகசாலை"
191, மின்சாரநிலைய வீதி,
[பஸ்நிலையம் அருகாமை]
யாழ்ப்பாணம்.

(சி-6543)


பருத்தித்துறை
**அருள்மிகு கோட்டு வாசல் ஸ்ரீ சண்டிகா பரமேஸ்வரி தேவஸ்தான வருடாந்த,**

7-ம் திருவிழாவாகிய இன்று (03.05.93) திங்கட்கிழமை இரவு 9.00 மணிக்கு கம்பன் கழக இயக்குனர்

### பதவி நீக்கப்பட்டார்

[கொழும்பு]

பேராசிரியர் நளின் டிசில்வா கொழும்புப் பல்கலைக் கழகத்திலிருந்து சேவை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

குற்றப் பத்திரிகையில் அவருக்கு எதிராகச் சுமத்தப்பட்டிருந்த ஐந்து குற்றங்களிலும் நளின் டி சில்வா பல்கலைக்கழகப் பேரவையால் குற்றவாளியாகக் காணப்பட்டுச் சேவையில் இருந்துக் நீகப்பட்டுள்ளார்.

## நினைவு கூருகின்றோம் ... 1993-05-03

1988ஆம் ஆண்டு மட்டு - வந்தாறுமூலைப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-
**விக்கி** (ஐயாத்துரை பிரபாகரன் - வந்தாறுமூலை - மட்டு.)

தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-
**ஜெகன்** (கோவிந்தசாமி தெய்வேந்திரன் - ஊறணி, வல்வெட்டித்துறை - யாழ்.)

1989ஆம் ஆண்டு கிளிநொச்சியில் தேசவிரோத சக்திகளினால் குத்தியும். சுட்டும் கொல்லப்பட்ட அதே பகுதிப் பிரஜைகள் குழுப் பொருளாளர்-

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/6544)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி குணரட்ணம் இரத்தினம்

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த திருமதி குணரட்ணம் இரத்தினம் 2-5 93இல் சிவபதமெய்திவிட்டார்.

இவர் செ. குணரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும், சந்திரேஸ்வரி, கமலாதேவி, சபாநாதன்(பிரான்ஸ்). வரதராஜா (இலங்கை வங்கி ஆஸ்பத்திரிவீதி, யாழ்.). சற்குணதேவி (பிரான்ஸ்), சகுந்தலா, விக்கின ராஜா ஆகியோரின் அன்புத் தாயாரும், இரத்தினசிங்கம் (இளைப்பாறிய தபாற்கந்தோர் ஊழியர் கச்சேரி கிழக்கு ஒழுங்கை), சுந்தரலிங்கம் (விவசாயக் கந்தோர் திருநெல்வேலி) செல்வநாயகி, இந்திராதேவி, விபுலானந்தராசா (பிரான்ஸ்). பாலேந்திரன் [பரந்தன்]ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று 03-05-93 திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

கே. கே எஸ் வீதி.
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (4807)

தகவல் :
செ. குணரெட்ணம்
கணவர்

யும் பலரும் மேடையில் நடித்து விட்டனர். (4799)

## ஒத்து மாறல்

பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியர் கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு ஒத்துமாற (Mutual Transfer) விரும்புகிறார். தொடர்பு;- 40/4 கோவில் வீதி, சுண்டுக்குளி (4803)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

சுத்தஇன பொமனேரியன் நாய்க்குட்டிகள், 45 நாட்களுற்றிய நிலையில் விற்பனைக்குண்டு முகவரி:- ஸிந்துஜா வைத்தீஸ்வரன், மானிப்பாய் ஆண்கள் பாடசாலை முன்பாக மானிப்பாய். (4805)

## பழைய பொருள்கள் உத்தரவாதத்துடன்

பல ஆண்டுகளுக்குமுன் உருவாக்கப்பட்ட சுவர் மணிக்கூடுகள், நவநாகரிக பாவனைக்கு வந்துள்ளமையால். உங்கள் பழைய சுவர்மணிக்கூடுகள் யாவும் அனுபவசாலியின் மூலம் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படுகிறது. வாரத்திற்கு இரு மணிக்கூடுகள் மட்டும் திருத்தப்படும். டில்கா வாச் அன்ட் ரேடியோ வேக்ஸ் 284 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [6542]

## தொழிலாளர் கல்விச் சான்றிதழ் நெறி முதல் அரையாண்டுப் பரீட்சை 1993

மேற்குறிப்பிட்டபரீட்சை யூன் மாதம் 5-ம், 6-ம், 12-ம், 13-ம் திகதிகளில் நடைபெறும்.

பரீட்சார்த்திகள் பரீட்சைக்கிளையில் பெறப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பூர்த்திசெய்து 17 05 1993 க்கு முன்பாக சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மீள் பரீட்சார்த்திகள் தகுந்த பரீட்சைக்கட்டண பற்றுச்சீட்டுடன் தங்களது பரீட்சை விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பித்தல் வேண்டும் என்பதை கவனத்திற் கொள்ளவும்.

- பதிவாளர்.

(சி/6545)

# கண்ணீர் அஞ்சலி

நல்லூர் லயன்ஸ் கழக ஸ்தாபக உறுப்பினரும் இயக்குனர் சபை அங்கத்தவருமான

லயன் டாக்டர்

## இ. பாக்கியநாதன்

அவர்கள் 2- 5- 93 ஞாயிற்றுக்கிழமை காலை திடீர் மரணம் எய்தியமை எமது கழகத்திற்குஒரு பேரிழப்பாகும்.

அன்னாரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதுடன், அவரை இழந்து [illegible] உற்றார், உறவினர். நண்பர்கள் யாவருக்கும் எமது கண்ணீர் அஞ்சலியை சமர்ப்பிக்கின்றோம்.

நல்லூர் லயன்ஸ் கழகம்

(4811)

# 4-வது ஆண்டு நினைவுதினம்



## சின்னத்துரை பிரபாகரன்

(யாழ் பல்கலைக்கழக முன்னாள் இறுதி ஆண்டு மாணவன்)

இவன் கல்லறைச் செய்தி

இவன் தான் வாழ்வதற்காகக் கற்கவில்லை
மக்களுக்குக் கொடுப்பதற்காகவே கற்றான்.
கொடுக்கவே கற்ற இவன் தலையில்
இந்திய இராணுவம் முள்முடி தரித்தது.

— நண்பர்கள்

[சி 6550]

தமிழ்த்தாய் புத்தகசாலையில்

இதோ!

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த எமது அடுத்ததொகுதி புத்தகங்கள்விற்பனைக்குவந்துவிட்டன

குறைந்த விலை! நிறைந்த சேவை!

"தமிழ்த்தாய் புத்தகசாலை"

191, மின்சாரநிலைய வீதி,
[பஸ்நிலையம் அருகாமை]
யாழ்ப்பாணம்.

(சி-6543)

பருத்தித்துறை

அருள்மிகு கோட்டு வாசல் ஸ்ரீ சண்டிகா பரமேஸ்வரி தேவஸ்தான வருடாந்த,

7-ம் திருவிழாவாகிய இன்று (03.05.93) திங்கட்கிழமை இரவு 9.00 மணிக்கு கம்பன் கழக இயக்குனர்

திரு. **இ. ஜெயராஜ்** அவர்களால்

## "தாயினும் சாலப் பரிந்தவள்"

என்னும் விடயம் பற்றி சொற்பொழிவு நடாத்தப்படும். அம்பாள் அடியார்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
7-ம் திருவிழா உபயகாரர்
துரையப்பா - முத்துப்பிள்ளை குடும்பத்தினர்
(லக்ஷ்மி பவான், பருத்தித்துறை)

03. 05. 93

[சி-6552]

## எடிசன் அக்கடமி

(யாழ். இந்துக்கல்லூரி அருகாமையில்)

411/1, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

## O/L DAY CLASS

**புதிய பிரிவு 2**

ஆரம்பம் : 04-05-93 செவ்வாய் மு.ப. 8.00மணி

(சி-6551)

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த திருமதி குணரட்ணம் இரத்தினம் 2-5 93இல் சிவபதமெய்திவிட்டார்.

இவர் செ. குணரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும், சந்திரேஸ்வரி, கமலாதேவி, சபாநாதன்(பிரான்ஸ்). வரதராஜா (இலங்கை வங்கி ஆஸ்பத்திரிவீதி, யாழ்.), சற்குணதேவி (பிரான்ஸ்), சகுந்தலா, விக்கினராஜா ஆகியோரின் அன்புத் தாயாரும், இரத்தினசிங்கம் (இளைப்பாறிய தபாற்கந்தோர் ஊழியர் கச்சேரி கிழக்கு ஒழுங்கை), சுந்தரலிங்கம் (விவசாயக் கந்தோர் திருநெல்வேலி) செல்வநாயகி, இந்திராதேவி, விபுலானந்தராசா (பிரான்ஸ்), பாலேந்திரன் [பரந்தன்]ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று 03-05-93 திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

கே. கே எஸ் வீதி.
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில் (4807)

தகவல் :
செ. குணரெட்ணம்
கணவர்

## சின்னையா காசிப்பிள்ளை

(இளைப்பாறிய யாழ். கல்வித் திணைக்கள ஊழியர்)

வாகையடி மட்டுவில் தெற்கைச் சேர்ந்தவரும் யாழ். கல்வித்திணைக்கள இளைப்பாறிய ஊழியருமான சின்னையா காசிப்பிள்ளை காலமானார். இவர் ஆச்சிமுத்துவின் அன்புக்கணவரும் நாகேஸ்வரி (ஆசிரியை), புவனேஸ்வரி [ஆசிரியை], ராஜேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் தந்தையும் வே. நாகராசா [ஆசிரியர்], க.ஞானப்பிரகாசம் [தபாலதிபர்]. சி. ஆறுமுகம் [ஆசிரியர்], இ. நாகராசா [ஆசிரியர்], ஆகியோரின் மாமனாரும், அ. ஞானேஸ்வரனின் பெரிய தந்தையும் ஜெயக்குமாரியின் மாமனாரும் சின்னையா செல்லத்தினதும் காலஞ்சென்றவர்களான தம்பு, பொன்னையா, சின்னத்தம்பி ஆகியோரின் சகோதரரும், ஓமந்தை விசுவலிங்கம் செல்லம்மா ஆகியோரின் மைத்துனரும், அரியரத்தினரின் சகலனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2.00மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து குச்சப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி (4808)

தகவல் :
மனைவி, பிள்ளைகள்

## மைக்கல் யோசெப் ஆசீர்வாதம்

(இளைப்பாறிய அதிபர்)

''லில்லி'' கரணவாய் கிழக்கைச் சேர்ந்த இளைப்பாறிய அதிபர் மைக்கல் யோசேப் ஆசீர்வாதம் அவர்கள் 02-05-93இல் இறைபதம் அடைந்தார்.

இவர் லில்லி ஜெயதேவியின் அன்புக் கணவரும் மேரி சரோஜினிதேவி (பிரான்ஸ்), றேமன் அமல்ராஜ் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையும், மங்களநாயகம் (பிரான்ஸ்), அவர்களின் அன்பு மாமனாரும், ஜென்சி, ஜொய்சி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார் அன்னாரின் பூதவுடல் 02-05-93 பி ப. 5.00 மணிக்கு கரவெட்டி கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. உற்றார், உறவினர் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

'லில்லி'
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி. (3729)

தகவல்:
சி. பரமானந்தன்
(மைத்துனர்)

# O/L DAY CLASS

**புதிய பிரிவு நாளை ஆரம்பம்! [04. 05. 93]**

கணிதம் திரு. S. கருணாகரன் (யாழ். வளாகம்)

ஏனைய பாடங்களுக்கும் எமது வழமையான தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு.

அனுமதிகள் வழங்கப்படுகின்றன. **நியூட்டன் அக்கடமி**

இருபாலை றோட், கோண்டாவில்.

(4810)

நல்லூர் ... யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

திரும்ப எடுக்க முடியாத அளவுக்கு மேல்
உன் கைகளை விட வேண்டாம்

-சீனப்பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 03-05-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

# சொர்க்கபுரியில் இரத்த ஆறு

சிறிலங்காவின் அண்மைக்கால அரசியல் வரலாறு உலகில் பலருக்கு அதிர்ச்சி ஊட்டுவதாக இருக்கலாம். 'சொர்க்கபுரி' என உல்லாசப்பயணிகள் மத்தியில் விளம்பரப்படுத்தப்படும் சிறிலங்காவின் இன்றைய அரசியல் களம் இரத்தம் தோய்ந்ததாக பலரையும் அச்சுறுத்துவதாகவும் மாறியுள்ளது.

ஆனால், சிறிலங்காவின் அரசியல் யதார்த்தம் இதுதான். சிறிலங்காவின் அரசியல் பரிணாம வளர்ச்சி அது நோக்கியே அண்மைக்காலமாக சென்றுகொண்டிருக்கின்றது. இதன் தொடக்கம் சிங்களப் பேரினவாதம் இன ஒதுக்குதலை ஆரம்பித்ததோடு தொடங்கியது. எனினும், 1977-ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசிய கட்சி பல்வேறு விதத்திலும் இதனை விரைவு படுத்தியது எனக் கூறுவதில் தவறேதும் இல்லை.

1958ஆம் ஆண்டு சிறிலங்காவின் பிரதம மந்திரி எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க கொல்லப்பட்டதுடன் ஆரம்பித்த அரசியற்கொலைகளின் தர்க்கபூர்வ வளர்ச்சியானது, ஜனாதிபதி பிரேமதாசா கொல்லப்பட்டதுடன் ஓர் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. அதாவது, ஒரு வார கால இடைவெளிக்குள் இரு முக்கிய அரசியற் தலைவர்களை இழக்க வேண்டிய அளவிற்கு சிறிலங்கா அரசியல் கொல்லும் களமாக மாறியுள்ளது.

இதில், இறுதியாக மே தினத்தன்று கொல்லப்பட்ட சிறிலங்காவின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தனித்துவமாக சில சிறப்புக்களைக் கொண்டவர் என்பதிலும், சிறிலங்காவின் அரசியல் வரலாற்றில் கனமான அரசியல் பாத்திரத்தை வகித்தவர் என்பதிலும் மிகையில்லை. முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா குடும்ப ஆட்சி முறை முடிவிற்குக் கொண்டுவந்தவரென்றால், சமூகத்தின் அடிமட்டத்திலிருந்து வந்த பிரேமதாசா உயர் குழாத்தின் ஆட்சியை முடிவிற்குக் கொண்டுவந்தவரெனலாம். இதற்கு அவர் தாண்டி வந்த பாதையானது, கல்லும், முள்ளும் நிறைந்ததாயினும், தனது குறிக்கோளுக்காக

## கருகிய நிலையில் பிரேமாவின் உடல்

### மோதிரமே அடையாளம் காட்டியது

[கொழும்பு]

மேதினக் குண்டு வெடிப்பில் உடல் சிதறிப் பலியான பிரேமதாசாவின்சடலம் அவர் அணிந்திருந்த மோதிரம் மற்றும் மணிக்கூடு ஆகியவற்றைக் கொண்டே அடையாளம் காணப்பட்டதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

இக்குண்டு வெடிப்பில் சிக்கிய ஜனாதிபதி மற்றும் இவரது மெய்ப்பாதுகாவலர்களது உடல்கள் உருக்குலைந்த நிலையில்ஆங்காங்கேசிதறிக் காணப்பட்டன. இதனால் ஜனாதிபதியின் சடலத்தை இனம் காண்பது பெரும் சிரமமாக இருந்ததாகவும் இறுதியில் இவர் அணிந்திருந்த மணிக்கூடு மற்றும் மோதிரம் ஆகியவற்றைக் கொண்டே சடலம் ஜனாதிபதி பிரமதாசாவுடையது எனஅதிகாரிகள் அடையாளம் கண்டதாக அச்செய்தி மேலும் தெரிவிக்கிறது.

## தேர்தலை நடத்த வேண்டும்; சிறிமாவோ கோரிக்கை

(கொழும்பு)

மாகாணசபைதேர்தல்களை எக்காரணம் கொண்டும் பின்போடக்கூடாது என எதிர்க்கட்சித்தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா பதில் ஜனாதிபதி டி.பி விஜேதுங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார். நேற்றுக்காலை ஜனாதிபதி மாளிகையில்பதில் ஜனாதிபதியை சந்தித்த சிறிமாவோ தேர்தல் முடிவடையும்வரை அரசியற்கட்சித் தலைவர்களுக்கு பாதுகாப்பு வழங்கவேண்டும் என்றும் தேர்தல் பிரசார கூட்டங்களுக்கும் வேறுபாடின்றி பாதுகாப்புத்தர வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

இக்கோரிக்கையை ஏற்றுக்கொண்ட டி. பி விஜேதுங்க இது தொடர்பாக பாதுகாப்பு அதிகாரிளுக்கு தா! அறிவுறுத்துவதாகவும் உறுதிமொழி அளித்தார்.

## ஜே. ஆர். தலைமையில் அரசு அதுவே சிறந்தவழியாம்

(கொழும்பு)

நாட்டில் குறைந்தது ஒரு வருட காலத்திற்காவது சர்வ கட்சிஆட்சி ஒன்றை அமைத்து அதற்கு ஜே ஆர். ஜெயவர்த்தன தலைமை தாங்க வேண்டும் என சர்வோதய தலைவர் ஆரியரட்ண வேண்டுகோள் விடுத்தார்.

நாட்டில் ஜனநாயகம் மீண்டும் அக்காலப் பகுதியில் தளிர்விடும் என்றும் இதனை சகல கட்சிகளும் நாட்டுக்காக செய்ய முன்வரவேண்டும் என்றும் இதற்கு முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தன தலைமை தாங்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தார்.

ஜே. ஆர். தலைமையில் சிறிமாவோ பண்டாரநாயக்கா, காமினி மற்றும் கட்சி தலைவர்கள் இதில் உள்ளடங்க வேண்டும் என்றும் இதுவே மீள இலங்கையில் ஜனநாயகம் தளிர்க்க வழியாக அமையும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## ஜனாதிபதியை தேர்தல்மூலம் தெரிவுசெய்க

### நவசமசமாஜக்கட்சி கோரிக்கை

(கொழும்பு)

பாராளுமன்றத்தின் மூலம் ஜனாதிபதியைத் தெரிவுசெய்யாமல் தேர்தல் மூலம் ஆட்சியை அமைக்க, ஆளும்கட்சியும், எதிர்க்கட்சிகளும் முன்வரவேண்டும் என நவசமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பி பி.சி க்கு அவர் வழங்கிய பேட்டியில் மேலும் குறிப்பிடுகையில்; மக்களின் விருப்பத்திற்கு மாறாகச் செயற்பட்டால் அவர்கள் மக்கள் செல்வாக்கை இழந்துவிடுவார்கள் என்பதை ஜனாதிபதியின் கொலை உணர்த்துகிறது. இதைச் சகல... கட்சிகளும் கருத்திற்கொள்ளுதல் வேண்டும்.

மக்களுக்கு இன்று தேவை வடக்குக் கிழக்கு யுத்தம்நிறுத்தப்படல் வேண்டும். ஊழல் ஒழிக்கப்படவேண்டும். மனிதப் படுகொலைகள் நிறுத்தப்பட வேண்டும். காணாமல்போனவர்கள் விபரம் அறிவிக்கப்பட வேண்டும். அது தொடராமல் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என்பவையே தவிர, வேறெதுவும் இல்லை.

இவற்றை உணர்ந்து செயற்படத் தவறினால் மக்கள் பல போராட்டங்களை நடாத்துவார்கள். அவர்கள் எந்நாளும் செத்துமடியத் தயாராக இல்லை என்றார்.

# ஜனநாயகம் பலவீன நிலை; இராணுவம் தலையிடலாம்

## சிறிலங்கா நிலைகுறித்து பி. பி. சி.

(லண்டன்)

புதிய ஜனாதிபதி சிறிலங்காவில் நியமிக்கப்பட்டாலும் அங்கு நீண்ட அதிகாரப் போட்டி தொடரத்தான் செய்யும். டி. பி. விஜயதுங்கவிற்கு அரசியலில் பெரிதாக ஆதரவு ஏதுமில்லை. இந் நிலையில் ஐ தே. க வின் எதிர்காலம் பாதிப்பாகவே உள்ளது. அதே சமயம் எதிரணியினரும் பல மற்றவர்களாகவே காணப்படுகின்றனர். இவ்வாறு முன்னாள் பி. பி. ஸி கொழும்பு செய்தியாளர் கிறிஸ் மொரிஸ் தெரிவித்துள்ளார்.

அச் செய்திக் குறிப்பில் மேலும்: பிரேமதாசாவின் அரசு நடுவன் அதிகாரக் குவிப்பைக் கொண்ட அரசாக விளங்கியது. எல்லா முடிவுகளும் அதிபராலும்அவரதுசிலஆலோசகர்களாலும்எடுக்கப்பட்டன. இடைக்கால அரசுத் தலைவராக பிரதம மந்திரி டி.பி.விஜயதுங்க நியமிக்கப்பட்டிருந்தாலும் இதுவெறும் இடைக்கால நடவடிக்கையேதவிர வேறெதுவும் இல்லை. அவருக்கென்று தனியாய் அரசியல் ஆதரவு எதுவும் கிடையாது.

இந்நிலையில் அதிபர் பதவிக்கு வரபல அமைச்சர்கள் போட்டியிடலாம். இதனால் ஐ.தே.க வில் உருவாகும் ஸ்திரமற்றநிலை அந்தக்கட்சியின் எதிர்காலத்தையே பாதிக்கக்கூடியது.

இவர்களுக்குரிய ஒரே ஒரு ஆறுதல் பிளவுபட்டிருக்கும் எதிர்க்கட்சிகள்தான். சிறிமாவோவைத் தொடர்ந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவிக்கு யார் போகவேண்டும் என்பதில் அக்கட்சி பிளவுபட்டு நிற்கின்றது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியோ தமது தலைவர் லலித் அத்துலத்முதலியின் கொலை அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை. ஒரு வார கால எல்லைக்குள் அடுத்தடுத்து நடந்த கொலைகளால் இலங்கை அரசியலில் நெருக்கமானான சூழல் ஒன்று தோன்றியுள்ளது. புதிய அரசுநிலை பெறசிறிதுகாலம் பிடிக்கும்.

கடந்த சில ஆண்டுகளாகப் பல நெருக்கடிகளைச்சமாளித்தும்இலங்கைஜனநாயகம்எதிர்நீச்சல் போட்டது என்பதைக் குறிப்பிடவேண்டும். 1989 இல் ஜே. வி. பிக்கு எதிராக எடுத்த கொடூரமான நடவடிக்கைக்குப்பின் பலர் பிரேமதாசாவை பாராட்டினர்பலர் கூறினர்.

இலங்கை அரசியலில் ஆயுதப் படையினர் இனி எடுக்கப் போகும் நிலை என்ன என்பது தான் கவனிக்க வேண்டிய ஒன்று. கடந்த பத்தாண்டுகளில் ஆயுதப்படையின் செல்வாக்கு அதிகரித்துள்ளது.

ஆயுதப்படையினர்இலங்கை அரசியலில் ஒருபோதும் நேரடியாக தலையிட்டதில்லை. ஆனால் இன்னும் ஒரு சில ஆண்டுகளில் ஜனநாயக முறையில் நன்மையில்லை என்று தோன்றும் பட்சத்தில் இராணுவத் தலைமையின் நேரடித் தலையீடு அரசியலில் அதிகரிக்கலாம்.

தமிழர்களின் வாக்குகளை மனதில் கொண்டு பிரேமதாசா இராணுவத்தின் கைகளைச் சற்று கட்டியே போட்டிருந்தார். இதனால் இராணுவ அதிகாரிகள் அதிருப்தி கொண்டிருந்தனர். புதிய அரசுத் தலைவர் மீது இராணுவத்தின் அழுத்தங்கள் அதிகமாகவே இருக்கும். இந்த அழுத்தத்தைச் சமாளிப்பது புதிய அதிபருக்குக் கடினமான ஒன்றாகவே இருக்கும்.

தமிழர் பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளை அதிகரிப்பதற்கு தமிழ் அரசியல் வாதிகள் எதிர்ப்புத் தெரிவிப்பார்கள். தமிழர்களைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கையாகவே இது உணரப்படும் என்றும் அதில் தனிநாடு கேட்டுப் போராடுபவர்களுக்குச் சாதகமாகவே அமையுமென அவர்கள் வாதிடுகிறார்கள்.

இலங்கை அரசுத் தலைவரைக் கொன்றது யாரென்று தெளிவாகத் தெரியவில்லை. அவர் தற்கொலைக் கொலையாளி என்பதால் விடுதலைப் புலிகள் மீது குற்றம் சுமத்தப் பட்டுள்ளது.

வடக்கு கிழக்குப் பகுதியில் இராணுவ நடவடிக்கைகளை மீளத் தொடங்கவும் அதனை நியாயப்படுத்தவும் அரசுப் படைகள் விடுதலைப்புலிகளையே குற்றம்சாட்ட விரும்புவர். எனினும் பிரேமதாசா அரசுக்கோ பல எதிரிகள் கொழும்பிலுள்ள ஏனைய அரசியல் பிரமுகர்கள் உட்பட ஜே. வி. பி. வரை

முழுமையான விசாரணை நடத்தப்படவேண்டும் இதனால் உண்மை முழுமையாக வெளிவரும் என்றில்லை என தெரிவிக்கப்படுகிறது

## அரசு—எதிர்க்கட்சிகள் தொண்டர்கள் மோதலாம்

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசா படுகொலை செய்யப்பட்டதை தொடர்ந்து எதிர்க்கட்சி தொண்டர்கள் மகிழ்ச்சி கொண்டாட்டங்களை நடத்தி வருவதால் இவர்களுக்கும் ஐ.தே.க தொண்டர்களுக்கும் இடையில் மோதல் வெடிக்கலாம் என வெரித்தாஸ் வானொலி நேற்று குறிப்பிட்டது.

இம்மோதல் பிற சமூகத்தினர் மீதும் பாயலாம் என்ற அச்சநிலை கொழும்பில் காணப்படுவதாகவும் அவ்வானொலி மேலும் தெரிவித்தது.

## பிரேமாவின் இடத்திற்கு கடும் கோட்பாட்டாளர்!

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசா படுகொலை செய்யப்பட்டதனால் ஏற்பட்டுள்ள அரசியல் வெற்றிடம் கடும் கோட்பாட்டாளர் ஒருவரால் நிரப்பப்படலாம் என கொழும்பில் தமிழ் வட்டாரங்களில் அச்சம் தெரிவிக்கப்படுவதாக பி.பி. சியின் கொழும்புச் செய்தியாளர் சியாகா நுவோசு நேற்று குறிப்பிட்டார்.

## தான் உருவாக்கியதற்கு பிரேமா தானே பலியானார்

### லோறன்ஸ் திலகர்

(பாரிஸ்)

பிரேமதாசா தானே உருவாக்கிய சூழ்நிலைக்கு அவ... லோறன்ஸ் திலகர் பி. பி.ஸி. க்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

பதி பிரேமதாசா கொல்லப்பட்டதுடன் ஓர் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. அதாவது, ஒரு வார கால இடைவெளிக்குள் இரு முக்கிய அரசியற் தலைவர்களை இழக்க வேண்டிய அளவிற்கு சிறிலங்கா அரசியல் கொல்லும் களமாக மாறியுள்ளது.

இதில், இறுதியாக மே தினத்தன்று கொல்லப்பட்ட சிறிலங்காவின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தனித்துவமாக சில சிறப்புக்களைக் கொண்டவர் என்பதிலும், சிறிலங்காவின் அரசியல் வரலாற்றில் கனமான அரசியல் பாத்திரத்தை வகித்தவர் என்பதிலும் மிகையில்லை. முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா குடும்ப ஆட்சி முறை முடிவிற்குக் கொண்டுவந்தவரென்றால், சமூகத்தின் அடிமட்டத்திலிருந்து வந்த பிரேமதாசா உயர் குழாத்தின் ஆட்சியை முடிவிற்குக் கொண்டுவந்தவரெனலாம். இதற்கு அவர் தாண்டி வந்த பாதையானது, கல்லும், முள்ளும் நிறைந்ததாயினும், தனது குறிக்கோளுக்காக சளைக்காது உழைத்தவராவார்.

ஆனால், திரு. பிரேமதாசாவின் ஆட்சிக்காலம் சிறிலங்காவின் நவீன அரசியலில் என்றுமில்லாத அளவிற்கு இரத்தம் தோய்ந்ததாகும். இது இலங்கை அரசியலில் கொலைகள் மலிந்த காலமாகும். சர்வதேச ரீதியில் மனித உரிமை மீறலில் முன்னணி நாடு என்ற பட்டத்தை இவரது ஆட்சிக்காலம் பெற்றுக்கொடுத்தது. ஆகையினால், இவரது பதவிக்காலம் கரும் புள்ளிகள் பல நிறைந்த முக்கியமான காலப்பகுதியாகும்.

இதேவேளை, இதற்கு தனியாக திரு. பிரேமதாசாவின் மீது முழுப் பொறுப்பையும் சுமத்திவிட முடியாது. சிங்கள பேரினவாத ஆட்சியாளர் கடைப்பிடித்த அரசியல் வழிமுறையின் தர்க்கபூர்வ வளர்ச்சி பிரேமதாசா ஆட்சிக் காலத்தில் வெளிப்பட்டது. ஆனால், திரு. பிரேமதாசா அதனை உச்சிவரை கொண்டு சென்றார் என்பதே உண்மையாகும்.

திரு. பிரேமதாசா கொலையுண்டதன் பின்பு அவர் குறித்து விமர்சனம் செய்த பி பி ஸி. அவர் பல அரசியல் எதிரிகளைக் கொண்டிருந்தார் எனத் தெரிவித்திருந்தது. இது உண்மைதான். ஆகையினால், அவரது கொலை குறித்து எவரும் எழுந்தமானமாக ஒரு முடிவிற்கும் வர முடியாது என்பதும் நிதர்சனமே.

ஆனால், சிறிலங்கா ஜனாதிபதி தனது அரசியல் எதிரிகளை அணுகியவிதம் குறித்து பெரும் சர்ச்சைக்குரிய கருத்துக்களே உள்ளன. இவர் தனது பல்வேறு மட்டத்திலும் இருந்த எதிரிகளை சட்டத்திற்கு அப்பால்நின்று வன்முறை மூலம் அணுகினார் என்றே குற்றம் சாட்டப்படுகின்றது. ஜே வி. பியை அவர் அணுகிய முறையானது, இதற்கு உதாரணமாகக் காட்ட முற்றிலும் பொருத்தப்பாடானது. மேலும், தமது நியாயபூர்வமான உரிமைகளைக் கோரியதமிழர் தொடர்பாக அவர் கடைப்பிடித்த கொள்கையும் இனப் படுகொலைக்கு வழி வகுப்பதாகவே அமைந்திருந்தது.

இந் நிலையில், திரு. பிரேமதாசா வன்முறைக்குப் பலியாகி இருப்பதென்பது அவரது வழிமுறையையே அவரது எதிரிகளும் தேர்ந்தெடுத்துள்ளார்கள் என்பதையே காட்டுவதாகவுள்ளது. ஆகையினால், ஜனாதிபதி பிரேமதாசாவின் மரணத்தை ஜனநாயக வழிமுறைகளை மீறிய ஒரு கொலை எனக் குறிப்பிடுவது பொருத்தப்பாடு அற்றதொன்று என்றே கூறலாம்.

## ஜனாதிபதியை தேர்தல்மூலம் தெரிவுசெய்க

### நவசமசமாஜக்கட்சி கோரிக்கை

(கொழும்பு)

பாராளுமன்றத்தின் மூலம் ஜனாதிபதியைத் தெரிவுசெய்யாமல் தேர்தல் மூலம் ஆட்சியை அமைக்க, ஆளும்கட்சியும், எதிர்க்கட்சிகளும் முன்வரவேண்டும் என நவசமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பி பி. சிக்கு அவர் வழங்கிய பேட்டியில் மேலும் குறிப்பிடுகையில்; மக்களின் விருப்பத்திற்கு மாறாகச் செயற்பட்டால் அவர்கள் மக்கள் செல்வாக்கை இழந்துவிடுவார்சள் என்பதை ஜனாதிபதியின் கொலை உணர்த்துகிறது. இதைச் சகல முதலாளித்துவக் கட்சிகளும் கருத்திற்கொள்ளுதல் வேண்டும்.

மக்களுக்கு இன்று தேவை வடக்குக் கிழக்கு யுத்தம்நிறுத்தப்படல் வேண்டும். ஊழல் ஒழிக்கப்படவேண்டும். மனிதப் படுகொலைகள் நிறுத்தப்படவேண்டும். காணாமல்போனவர்கள் விபரம் அறிவிக்கப்படவேண்டும். அது தொடராமல் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என்பவையே தவிர, வேறெதுவும் இல்லை.

இவற்றை உணர்ந்து செயற்படத் தவறினால் மக்கள் பல போராட்டங்களை நடாத்துவார்கள். அவர்சள் எந்நாளும் செத்துமடியத் தயாராக இல்லை என்றார்.

தலைமைப் பதவிக்கு யார் போகவேண்டும் என்பதில் அக்கட்சி பிளவுபட்டு நிற்கின்றது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியோ தமது தலைவர் லலித் அத்துலத்முதலியின் கொலை அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை. ஒரு வார கால எல்லைக்குள் அடுத்தடுத்து நடந்த கொலைகளால் இலங்கை அரசியலில் நெருக்கமானான சூழல் ஒன்று தோன்றியுள்ளது. புதிய அரசுநிலை பெறசிறிதுகாலம் பிடிக்கும்.

கடந்த சில ஆண்டுகளாகப் பல நெருக்கடிகளைச்சமாளித்தும்இலங்கைஜனநாயகம்எதிர் நீச்சல் போட்டது என்பதைக் குறிப்பிடவேண்டும். 1989 இல் ஜே. வி. பிக்கு எதிராக எடுத்த கொடூரமான நடவடிக்கைக்குப் பின் பலர் பிரேமதாசாவை பாராட்டினர்பலர் தூற்றினர்.

# புலிகளை - தமிழீழத்தை பா.ம. கட்சி ஆதரிக்கிறது

### டாக்டர் ராமதாஸ் தெரிவிப்பு

(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகளையும், தமிழ் ஈழப் போராட்டத்தையும் தமது கட்சி ஆதரிப்பதாக பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர்ராமதாஸ் கூறியுள்ளார்.

கன்னியா குமரியில் தமது கட்சியின் செயற்குழுக் கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில், பழநி நாடாளுமன்ற இடைத்தேர்தலின் போது காங்கிரஸ் கட்சியையோ, அ. இ. அ. தி. மு. க. வையோ அல்லது தி. மு. க.வையோ தமது கட்சிஆதரிக்கப் போவது இல்லை என்றும் தெரிவித்தார்.

## பழனி இடைத்தேர்தலை ஒத்திவைக்க கோரிக்கை

[சென்னை]

பழனி நாடாளுமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தல் நடக்க இருக்கும் இத் தருணத்தில், முதலமைச்சர் சலுகைகளை அறிவித்திருப்பதால் அங்கு தேர்தலை ஒத்திவைக்க வேண்டும் என்று பாட்டாளிக்கள் கட்சித்தலைவர் ராமதாஸ் கூறியுள்ளார்.

கடந்த வியாழன் தூத்துக்குடியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில், மாநிலத்தில் சட்டம், ஒழுங்கு நிலைமை சீர்குலைந்து வெடிகுண்டு மற்றும் துப்பாக்கிக் கலாசாரம் பரவி வருவதாகவும் குற்றம் சாட்டினார்.

## மாமண்டூர் சம்பவம் மூலம் மெத்தனப்போக்கு அம்பலம்

### பாரதிய ஜனதா தெரிவிப்பு

தமிழக அரசு தொடர்பாக மெத்தனமான ஒரு போக்கையே கடைப்பிடிக்கிறது என்பதை மதுராந்தகம் அருகே மாமண்டூரில் நடந்த சம்பவம் எடுத்துக்காட்டுவதாக பாரதீய ஜனதாக் கட்சி தலைவர் நேற்று சென்னையில் தெரிவித்தார்.

பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் முரளிமனோகர் ஜோஷி மேலும் கூறுகையில் இச்சம்பவம் தொடர்பாக நியமிக்கப்பட்டிருக்கும் உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையிலான விசாரணைக் குழு விசாரணையை குறிப்பிட்ட காலவரம்புக்குள் பூர்த்தி செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். இந்தச் செய்தியாளர் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழ் நாடு கிளைத் தலைவர் ஜனா கிருஷ்ணமூர்த்தி கூறுகையில் தமிழ்நாட்டில் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள் முற்றாக தடுத்து நிறுத்தப்பட்டிருப்பதாக தன்னால் கூறமுடியாது என்று குறிப்பிட்டார்.

---

## ஜெலட்டின் மீட்பு

(சென்னை)

தமிழ் நாட்டின் கோயம்புத்தூர் நகருக்கு சமீபமாக தகுந்த உரிமம் பெறாமல் பண்ணை வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த எண்ணூறு ஜெலட்டின் குச்சிகளையும், சுமார் பதினாறாயிரம் டெட்டனேட்டர்களையும் ஊரகக் காவல்துறையினர் நேற்று முன்தினம் கைப்பற்றியுள்ளனர். அந்த வீட்டின் உரிமையாளரும்பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

## 6 பொலிஸார் கைது

(சென்னை)

மதுராந்தகம் அருகே மண்டூரில் தடாகைதிகள் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக ஒரு சப் இன்ஸ்பெக்டர் உட்பட ஐந்து பொலிஸ்காரர்கள் தமிழக பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் காவல் துறை ஆணையாளர் ஒருவர், இரண்டு உதவி ஆணையாளர்கள், இரண்டு சப் இன்ஸ்பெக்டர்கள் உட்பட ஒன்பது பேர் பணியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

வருவதால் இவர்களுக்கும் ஐ.தே.க தொண்டர்களுக்கும் இடையில் மோதல் வெடிக்க காணப்படுவதாகவும் அவ வானொலி மேலும் தெரிவித்தது.

## பிரேமாவின் இடத்திற்கு கடும் கோட்பாட்டாளர்!

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசா படுகொலை செய்யப்பட்டதனால் ஏற்பட்டுள்ள அரசியல் வெற்றிடம் கடும் கோட்பாட்டாளர் ஒருவரால் நிரப்பப்படலாம் என கொழும்பில் தமிழ் வட்டாரங்களில் அச்சம் தெரிவிக்கப்படுவதாக பி.பி. சியின் கொழும்புச் செய்தியாளர் சியாகா நுவோசு நேற்று குறிப்பிட்டார்.

## தான் உருவாக்கியதற்கு பிரேமா தானே பலியானார்

### லோறன்ஸ் திலகர்

(பாரிஸ்)

பிரேமதாசா தானே உருவாக்கிய சூழ்நிலைக்கு அவரே பலியாகிவிட்டார். அவருக்கு ஏராளமான எதிரிகள் உள்ளனர். பிரேமதாசாவினால் பாதிக்கப்பட்ட எவராவது அவரைக்கொல்ல தனது உயிரைப் பணயம் வைக்கமுன் வந்திருக்கலாம், தென் பகுதியில் 60 ஆயிரம் இளைஞர்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டது சாதாரண விடயமல்ல எனவே தற்கொலை தொழில் நுட்பம் என்பவற்றைக் காரணம் காட்டி புலிகளை குற்றம் சாட்டுவதில் அர்த்தமில்லை. இவ்வாறு விடுதலைப்புலிகளின் பிரமுகர் லோறன்ஸ் திலகர் பி. பி.ஸி.க்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

சிறிலங்காவில் புதிய தலைமை ஏற்பட்டுள்ள நிலையில் புலிகளின் போக்கில் மாற்றம் ஏற்படுமா என கேட்கப்பட்டபோது புதிய மாற்றங்களினால் தமிழீழ மக்கள் பெரிதான மாற்றம் எதையும் கண்டுவிடவில்லை என்பதை கடந்த காலவரலாறு எடுத்துக்கூறுகிறது எனக்குறிப்பிட்ட திலகர் புலிகள் தொடர்ந்தும் எடுத்துவரும் சமாதான முயற்சிகளுக்கு புதியதலைமை குந்தகமாக இருக்கமாட்டாதுஎன்றே எதிர்பார்க்கின்றோம் என்றும் தெரிவித்தார்

## சுதந்திரக் கட்சிவேட்பாளர் இன்று தெரிவாவார்

(கொழும்பு)

ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடுவது தொடர்பாக ஆராய சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு இன்று கூடவுள்ளதாக கட்சியின் செயலாளர் நேற்று தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் போட்டியிடவுள்ள வேட்பாளர் பற்றி முடிவு மேற்கொள்ளப்படும் என மேலும் அவர் தெரிவித்தார்.

## விஜயதுங்கவின் திறமை சந்தேகத்திற்குரியது

### காமினி

[கொழும்பு]

டி. பி. விஜயதுங்க ஒரு நாட்டின் ஜனாதிபதியாக எப்படிச் செயற்படுவார்என்பதை எனக்குச் சொல்ல முடியாது. அவர் திறமையாகச் செயற்படுவாரா என்பது சந்தேகம். இவ்வாறு பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் காமினி திசாநாயக்கா தெரிவித்தார்.

டி. பி. விஜயதுங்கவை பிரேமதாசாதான் நாட்டின் பிரதமராக்கினார். அவரின் அரசியல் செல்வாக்கு அல்லது திறமையினால் அவருக்கும் பிரதமர் பதவி வழங்கப்படவில்லை. டி. பி. விஜயதுங்க எதைச் செய்ய வேண்டும் என்று ஜனாதிபதி எதிர்பார்த்தாரோ அதை விஜயதுங்க செய்வார் என்பதற்காக அவர் பிரதமராக்கப்பட்டார் என்று மேலும் அவர் தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியின் அதிகாரங்கள் எல்லாம் மையப்படுத்தப்பட்டுள்ளன. இந்த நிலையில் டி. பி. விஜயதுங்க டிசம்பர் 1994 வரை பதவியை திறம்பட நடத்துவாரா என்பதைச் சொல்ல முடியாது என்றார்.

17ஆம் திகதி தேர்தல் வன்முறைகள் எதுவும் இன்றிநடைபெறவேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாகும். ஆனால் வன்முறை ஜனநாயகத்தை மாசுபடுத்துவதால் இனி வரும் மாதங்களில் பலாத்காரமும் வன்முறையும் நாட்டில்ஏற்படலாம். அது ஜனாதிபதி பதவியையும் பாதிக்கக் கூடும் என்றும் காமினி திசாநாயக்கா தெரிவித்தார்.

ஈழநாதம்

# நீண்ட வரிசையில் அஞ்சலிசெலுத்த மக்கள்

(கொழும்பு)

காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாசாவின் பூதவுடல் அன்னாரது இல்லமான சுசரித்த மந்திரியவிற்கு நேற்று முன் தினம் நள்ளிரவில் கொண்டு வரப்பட்டதை தொடர்ந்து அங்கு மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

இன்று ஜனாதிபதியின் மாளிகைக்கு கொண்டு வரப்பட்டு இறுதி அஞ்சலிக்காக வைக்கப் பட்டு சுதந்திர சதுக்கத்தில் வியாழக்கிழமையன்று முழு அரச மற்றும் இராணுவ மரியாதைகளுடன் நல்லடக்கம் செய்யப்படவுள்ளது.

சுசரித்த மந்திரியவில் வைக்கப்பட்டிருக்கும் அமரர் பிரேமதாசாவின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக ஆயிரக்கணக்கான மக்கள் அங்கு திரண்டிருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. இரண்டு மைல்களுக்கும் நீளமான வரிசையில் மக்கள் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காகக் காத்திருப்பதக செய்தியாளர் ஒருவர் கூறியுள்ளார்.

## மூடப்பட்ட நிலையில் பிரேமாவின் பிரேதப்பேழை

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசாவின் உடல் வைக்கப்பட்டுள்ள பிரேதப்பெட்டி முற்றாக மூடப்பட்ட நிலையில் அதன் மீது சிறிலங்கா தேசியக்கொடி போர்த்தப்பட்டிருந்ததை ரூபவாஹினி நேற்று ஒளிபரப்பியது.

பிரேதப் பேழையின் அருகே பிரேமதாசாவின் பாரியார் ஹேமாவும், மகள் துலாஞ்சலியும் விம்மி அழுவதையும், மகளுக்கு தாயார் இடையிடையே ஆறுதல் கூறுவதையும் ரூபவாஹினி ஒளிபரப்பியது. ஆளும்கட்சி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், படை அதிகாரிகள், சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆகியோரும் தமது இறுதி அஞ்சலியை செலுத்துவதும் காண்பிக்கப்பட்டது.

அஞ்சலி செலுத்த வரிசையில் நின்ற சில மக்களையும் ரூபவாஹினி பேட்டி கண்டு அவர்களின் உணர்வுகளையும் ஒளிபரப்பியது.

## ஜனாதிபதியின் இல்லத்தில் பூதவுடல் அஞ்சலிக்கு

(கொழும்பு)

குண்டுவெடிப்பில் பலியான பிரேமதாசாவின் உடல் தற்போது அவரின் சென்பீற்றர்ஸ் சுச்சரித்த இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

இது நாளை செவ்வாய் காலை ஜனாதிபதி மாளிகைக்கு எடுத்துச்செல்லப்பட்டு எதிர்வரும் வியாழன் வரை அங்கு வைக்கப்பட்டிருக்கும் என தெரிய வருகிறது.

## அஞ்சலி செலுத்தச் செல்ல இலவச போக்கு வரத்து

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு இறுதி அஞ்சலி செலுத்தவரும் பொதுமக்களுக்கு இலவச போக்குவரத்துவசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாத்தறையிலிருந்து விசேட ரயில் சேவைகளும் நடாத்தப்பட்டுவருவதாக தெரிய வருகிறது.

## ஊரடங்கையும் மீறி பட்டாசு கொளுத்தினர்

### நேபாளத்தில் துக்கம்

முன்னாள்ஜனாதிபதிபிரேமதாசவின் மரணத்திற்கு அஞ்சலி செலுத்தும் முகமாக நேபாள அரசு இரண்டுநாள் துக்கதினத்தை அனுஷ்டிக்கிறது. இன்று அங்கு தேசிய விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. தேசிய கொடியும் அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டுள்ளது. மன்னர் பிரேந்திரா பிரதமர் கொய்ராலா ஆகியோர் சிறிலங்காவின் பதில் ஜனாதிபதி விஜயதுங்கவிற்கு அனுதாபச் செய்தியை அனுப்பியுள்ளனர்.

### பங்களாதேஷில் துக்கதினம்

பங்களாதேஷ் அரசாங்கமும் சிறிலங்கா ஜனாதிபதியின் மரணத்திற்கு அஞ்சலி செலுத்தும் முகமாக மூன்று நாட்கள் துக்கம் அனுஷ்டிக்க முடிவு செய்துள்ளது.

### குதிரைப் பந்தயம் ரத்து

ஜனாதிபதி பிரேமதாசாவின் மறைவுக்கு அஞ்சலி செலுத்து முகமாக தமிழ் நாட்டில் நடைபெறவிருந்த குதிரை ஓட்டப் பந்தயம் ஒன்று ரத்து செய்யப் பட்டுள்ளதாக சென்னை செய்திகள் தெரிவித்தன.

## ஆழ்ந்தகவலையுடன்துக்கம் அமெரிக்க அதிபர் தெரிவிப்பு

சிறிலங்கா ஜனாதிபதியின் அகால மறைவுச் செய்தி கேட்டு தான் ஆழ்ந்த கவலையும், துக்கமும் கொண்டிருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் கூறியுள்ளார்.

வெள்ளைமாளிகையிலிருந்து நேற்று முன்தினம் விடுக்கப்பட்ட அறிக்கையில் மேலும் ஜனாதிபதி பிரேமதாசா சிறிலங்காவில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்வதிலும், வறுமையை ஒழித்துக்கட்டுவதிலும் திடசங்கற்பம் பூண்டு செயற்பட்ட ஒரு தலைவர் ஆவார் என்றும், தமது தலைவனை இழந்து தவிக்கும் இலங்கை மக்களோடு அமெரிக்க மக்களும் துயரத்தைப் பகிர்ந்து கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## பிரேமா கொலை குறித்து எதிர்க்கட்சியினர் கண்டனம்

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா கொல்லப்பட்டது குறித்து தமது வன்மையான கண்டனத்தை தெரிவிப்பதாக எதிர்க்கட்சிகளின் கூட்டு முன்னணி அறிவித்துள்ளது.

பலவருடகாலமாக இலங்கை ஆட்சி சர்வாதிகாரப்போக்கில் நடந்து வந்ததாகவும், இதனைத் தாம் பலமுறை எடுத்துக் காட்டியதாகவும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கொலை குறித்து ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட அனைவரையும் அதிர்ச்சியும், கவலையும் கொள்ள வைத்துள்ளதாக அவ்வறிக்கையில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வெசாக் அலங்காரங்கள் இம்முறை இடம்பெறாது

(கொழும்பு)

பிரேமதாசாவின்மறைவுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக இம்முறை வெசாக் ஒளி அலங்காரப் பந்தல்கள் ஏதும் கொழும்பு மாநகரில் அமைக்கப்பட மாட்டாது என அறிவிக்கப் பட்டுள்ளது.

## காயம் எதுவுமின்றி

### புலிகளுக்கு ஜெயலலிதா உதவுவதாக

# பொய் வாக்குமூலம் பெற மத்திய அரசு முயற்சி

– எஸ். டி. சோமசுந்தரம் குற்றச்சாட்டு

[சென்னை]

தமிழகத்தில் சிறைவைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலி உறுப்பினர்களிடமிருந்து முதலமைச்சர் ஜெயலலிதா புலிகளுக்கு உதவுவதாக பொய்யான வாக்குமூலங்களை மத்திய அரசின் உளவுத்துறை மிரட்டி வாங்கிவருவதாக ஆளும் அ.தி.மு.க குற்றஞ்சாட்டியுள்ளது. ஜெயலலிதா அரசை கலைக்க அடித்தளம் போடும் முயற்சியாகவே இது நடைபெறுவதாகவும் அக்கட்சி மேலும் தெரிவித்தது.

நேற்று முன்தினம் மத்திய அரசின் உளவுத்துறை அதிகாரிகள் புலிகள் உள்ள சிறைக்கு சென்று ஜெயலலிதா புலிகளை இரகசியமாக சந்தித்தார், உதவுவதாக உறுதி அளித்தார் என்ற பொய்யானவாக்குமூலங்களை புலிகளிடமிருந்து பெற்றதாக தமிழக அமைச்சர் சோமசுந்தரம் கூறினார்.

ஜெயலலிதா புலிகளுடன் ஒப்பந்தம் செய்துள்ளார், அதன்படி அவர் பணம், பொருள் வழங்குகிறார். திட்டமிட்டு பலரை சிறையிலிருந்து தப்ப உதவுகின்றார் என்ற பல ஒப்புதல் வாக்குமூலங்களை இந்திய புலனாய்வுப் பிரிவு மிரட்டி பெற்றுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வீரச்சாவு



கப். நளன் (செல்லத்தம்பி)



கப். திலீபன் (தொல்காப்பியன்)

# வீரப்பன் காட்டில் விடுதலைப்புலிகள்

கடந்த வியாழனன்று 3 தடா கைதிகளை மீட்டுக் கொண்டு தப்பிச்சென்ற விடுதலைப்புலி உறுப்பினர்கள் என்று சந்தேகிக்கப்படுபவர்கள் சந்தனக் கடத்தல்காரன் வீரப்பன் ஒளிந்துகொண்டுள்ள தமிழக கர்நாடக எல்லையில் உள்ள காட்டுப்பகுதியினுள் தப்பிச்சென்றுவிட்டதாக தமிழக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## இயக்கச்சி காவலரண் மீது புலிகள் தாக்குதல்

(இயக்கச்சி)

இயக்கச்சிப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவ காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர்.

கடந்த 29 ஆம் திகதி இரவு 7.30 மணியளவில் இயக்கச்சி பிரதான வீதிக்கு வலது பக்கமாக அமைந்திருந்த காவலரண்கள் மீதே விடுதலைப்புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர்.

இத் தாக்குதலின்போது இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவில்லை. புலிகள் தரப்பில் எதுவித சேதமும் ஏற்படவில்லை.

இதைத் தொடர்ந்து முகாம்களிலிருந்தவாறு இராணுவத்தினர் கலிபர் தாக்குதல்களையும், எறிகணைத் தாக்குதல்களையும் தொடர்ச்சியாக மேற்கொண்டனர்.

இவ் எறிகணைத் தாக்குதல்கள் 50 நிமிடங்கள் வரை நீடித்த போதிலும் இதனால் எதுவித சேதங்களும் ஏற்படவில்லை எனத்தெரிய வருகிறது.

## வன்னி மாவட்டத்தில் மேதின எழுச்சி பேரணி

[வவுனியா]

வன்னி மாவட்டத்தில் மேதின நிகழ்வுகளில் பெருமளவு மக்கள் உணர்வு பூர்வமாகப் பங்கேற்றதுடன் ஊர்வலமும் சைக்கிள் பேரணிகளும் இடம்பெற்றன. நேற்று முன்தினம் வவுனியா புளியங்குளம் இராமனார் சந்தியில் இருந்து ஆரம்பமான மேதின எழுச்சி ஊர்வலம் அங்கிருந்து புறப்பட்டு புளியங்குளம்பொது விளையாட்டு மைதானத்தைச் சென்றடைந்தது.

பல்லாயிரக்கணக்கான சிறுவர்கள், குழந்தைகள், வயோதிபர்கள் எனப் பலதரப்பட்டோரும் கலந்துகொண்ட இவ்வூர்வல முடிவில் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

இப்பொதுக்கூட்டத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகம் நடத்திய உற்பத்தி எழுச்சி வாரத்தில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்களும்

## கிளிநொச்சி கோட்டத்தில்

(கொழும்பு)

குண்டுவெடிப்பில் பலியான பிரேமதாசாவின் உடல் தற் போது அவரின் சென்பீற்றர்ஸ் சுச்சரித்த இல்லத்தில் அஞ்ச லிக்காக வைக்கப்பட்டுள்ளது.

இது நாளை செவ்வாய் காலை ஜனாதிபதி மாளிகைக்கு எடுத் துச்செல்லப்பட்டு எதிர்வரும் வியாழன் வரை அங்கு வைக் கப்பட்டிருக்கும் என தெரிய வருகிறது.

## அஞ்சலி செலுத்தச் செல்ல இலவச போக்கு வரத்து

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு இறுதி அஞ்சலி செலுத்தவரும் பொதுமக்களுக்கு இலவச போக்குவரத்துவசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ள தாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாத்தறையிலிருந்து விசேட ரயில் சேவைகளும் நடாத்தப் பட்டுவருவதாக தெரிய வரு கிறது.

## ஊரடங்கையும் மீறி பட்டாசு கொளுத்தினர்

தென் இலங்கையின் பல பகுதிகளிலும் நேற்று முன் தினம் ஊரடங்கையும் பொருட்படுத்தாது மக்கள்வீதி களில் இறங்கிபட்டாசு கொளு த்தி ஆரவாரம் செய்ததாக ஏஜென்சி செய்திகள் தெரி வித்தன.

கொழும்பு நகரம் உட்பட தென் இலங்கையின் பல பகுதி களிலும் இவ்வாறான பல சம்பவங்கள் இடம் பெற்றுள் ளதாக அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

ஜே. வி. பி. என்றபோர்வை யில் கொல்லப்பட்ட இளை ஞர்களின் உறவினர்களே இவ் வாறு பட்டாசு கொளுத்தி ஆரவாரம் செய்வதாக தெரி விக்கப்படுகிறது.





சிமயம்

மேலதிக விபரங்கள் நாளை

ரூபின்ஸ் நிறுவனம்

"விமலம்"

நல்லூர் குறுக்குத் தெரு

யாழ்ப்பாணம்

(சி-6523)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 -ம் ஆண்டு மே மாதம் 03 -ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## எதிர்க்கட்சியினர் கண்டனம்

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாகொல்லப்பட்டது குறித்து தமது வன்மையான கண்டனத்தை தெரிவிப்பதாக எதிர்க்கட்சிகளின் கூட்டு முன் னணி அறிவித்துள்ளது.

பலவருடகாலமாக இலங்கை ஆட்சி சர்வாதிகாரப்போக்கில் நடந்து வந்ததாகவும், இத னைத் தாம் பலமுறை எடுத் துக் காட்டியதாகவும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இக்கொலை குறித்து ஜன நாயகத்தில் நம்பிக்கை கொண்ட அனைவரையும் அதிர்ச்சியும், கவலையும் கொள்ள வைத்துள்ளதாக அவ்வறிக்கையில்மேலும் தெரி விக்கப்பட்டுள்ளது.

## வெசாக் அலங்காரங்கள் இம்முறை இடம்பெறாது

(கொழும்பு)

பிரேமதாசாவின்மறைவுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக இம்முறை வெசாக் ஒளி அலங் கரிப்பு பந்தல்கள் ஏதும் கொழும்பு மாநகரில் அமைக் கப்படமாட்டாது எனஅறிவிக் கப் பட்டுள்ளது.

## காயம் எதுவுமின்றி ஒஸி தப்பினார்

### பி. பி. ஸி. செய்தி தவறானது

(கொழும்பு)

இலங்கை மக்கள் கட்சித் தலைவர் ஒஸி அபயகுண சேகர நேற்று முன்தினம் ஆமர் வீதி சந்தியில் இடம் பெற்ற குண்டு வெடிப்பில் காயமேதுமின்றி உயர்தப்பி விட்டதாக அறிவிக்கப்பட்டுள் ளது. முன்னதாக இவரும் ஜனாதிபதி பிரேமதாசா கொல்லப்படக் காரணமான குண்டு வெடிப்பில் சிக்கி பலி யானதாக பி.பி.ஸி. தனது செய்தி அறிக்கையில் குறிப் பிட்டிருந்தமை தெரிந் ததே.

ஒஸி அபயகுணசேகரா ஜனாதிபதியின் பூதவுடலுக்கு நேற்று அஞ்சலி செலுத்த வருகை தந்திருந்தார்.

இதேவேளை பி.பி.ஸி. நேற்று முன்தினம் ஒஸி தொட ர்பாக வெளியிட்ட செய்திகுறி த்து வருத்தம் தெரிவித்த துடன் மன்னிப்பும் கோரியது.

## இந்திய பத்திரிகைகள் பிரேமாவிற்கு முக்கியத்துவம்

[டில்லி]

சிறிலங்கா ஜனாதிபதி பிரே மதாசா கொலை செய்யப் பட்ட செய்தியை புதுடில்லியி லிருந்து வெளிவரும் பத்திரிகை கள் யாவும் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்துள்ளன. இதனை முக்கிய தலைப்பு செய்தியாகவும் சில பத்திரிகை கள் பிரசுரித்துள்ளன. அத்து டன் இச்சம்பவம் தொடர்பாக விபரணப் படங்களும், புகைப் படங்களும் கட்டம் கட்டப் பட்ட விசேட செய்திகளும் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

பிரேமதாசாவுடன் கொல் லப்பட்ட நபர்களின் எண் ணிக்கை பற்றி ஒவ்வொரு பத்திரிகையும் வெவ்வேறு எண்ணிக்கையை பிரசுரித்துள் ளன. ஆகக்கூடுதலாக 36 பேர் கொல்லப்பட்டிருக்க லாம் எனவும் அவை கூறியுள் ளன.

மேலும் லண்டனிலிருந்து வெளியாகும் பல பத்திரிகை களும் கூட தற்கொலைக் கொலையாளியின் தாக்குத லுக்கு இலக்காகி மரணமான பிரேமதாசாவின் கொலைச் சம்பவத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து முன்பக்கச் செய்தி யாக பிரசுரித்துள்ளன. இன்டி பென்டன்ட் பத்திரிகை கால னித்துவ காலத்திற்கு பின் இலங்கையில் கொல்லப்பட்ட தலைவர்களில் பிரேமதாசா வும் சேர்த்துக் கொள்ளப்பட் டுவிட்ட தாக குறிப்பிட்டுள்ளது

### திருமலையில்

இத் தாக்குதலின்போது 5 இராணுவத்தினர் கொல்லப் பட்டனர். ஏனையோர் காயங் களுடன் தப்பி ஓடிவிட்டனர். இத் தாக்குதலின்போது இம் முகாமில் அமைக்கப்பட்டிருந்த 12 காவலரண்களும் இராணு வத்தினர் தங்கும் பத்து அறை களும் விடுதலைப்புலிகளால் முற்றாக அழிக்கப்பட்டன.

### 2 போராளிகள்

வீரச்சாவடைந்த கப்டன் திலீபன் தொல்காப்பியன் [சண்முகராசா சோ - பாரதி புரம் கிளிவெட்டி, மூதூர், திருமலை],

கப்டன் நளன் / செல்லத் தம்பி [யோகராசா சுபாஸ் கரன் - திரியாய் திருமலை] ஆகிய இரு வேங்கைகளுக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித் துக் கொள்கின்றனர்.



கப். திலீபன்
(தொல்காப்பியன்)

## கிளிநொச்சி கோட்டத்தில் மேதின எழுச்சி நிகழ்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கோட்டமேதின எழுச்சி ஊர்வலம் நேற்று முன் தினம் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினரின் பான்ட் வாத்தியம் இசைக்க நடைபெற்றது.

கரடிப்போக்குச் சந்தியிலி ருந்து ஆரம்பமான ஊர்வலம் கிளிநொச்சி அரசாங்க அதிபர் பணிமனை நோக்கி சென்றது.

பல்வேறு வகையான எழுச் சிக் கோசங்களை எழுப்பிய வாறு ஆண்கள் பெண்கள் சிறு வர்கள் உட்பட பல்லாயிரக் கணக்கான மக்கள் இதில் கலந்து கொண்டனர். இதன் போது ஒருமைல் நீளமான சைக்கிள் அணிவகுப்பும் இடம் பெற்றது.

இவ் எழுச்சிப் பேரணியில் பல்வேறுபட்ட அடக்குமுறை களை சித்தரிக்கும் அலங்கார ஊர்திகளின் பவனிகளும் இடம்பெற்றன.

இதனை அடுத்து மாலை 6 மணியளவில் கிளிநொச்சி செயலகத்தில் பொதுக்கூட்டம் இடம்பெற்றது.

இதில் விடுதலைப்புலிகள் பிரமுகர்களும் பொதுஅமைப்பு களின் பிரதிநிதிகளும் உரை நிகழ்த்தினர்.

இக்கூட்டமுடிவில் பொரு ண்மிய மேம்பாட்டுகழகம் கிளிநொச்சி பிரிவில் நடை பெற்ற உற்பத்தி எழுச்சி வாரப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில் களை வழங்கியது.

### மாதாந்த

ரிடமிருந்து ரூபா 10 ம் தனி யார் வியாபாரக் கணக்கு களை வைத்திருப்போரிடமிரு ந்து ரூபா 25 ம், வியாபாரக் கணக்குகளை வைத்திருப்போ ரிடமிருந்து ரூபா 50ம், கூட்டுத்தாபனக் கணக்குகளை வைத்திருப்போரிடமிருந்து ரூபா 50 ம்,

இம் மீதிகளைப் பேணா தோரிடமிருந்து சேவைக்கட் டணம் அறவிடப்பட உள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டுள் ளது. (17)

மாக அமைந்திருந்த காவல ரண்கள் மீதே விடுதலைப்புலி கள் தாக்குதலை மேற்கொண் டனர்.

இத் தாக்குதலின்போது இராணுவத்தினருக்கு ஏற்

மேற்கொண்டனர்.

இவ் எறிகணைத் தாக்குதல் கள் 50 நிமிடங்கள் வரை நீடித்த போதிலும் இதனால் எதுவித சேதங்களும் ஏற்பட வில்லை எனத்தெரிய வருகி றது.

## வன்னி மாவட்டத்தில் மேதின எழுச்சி பேரணி

[வவுனியா]

வன்னி மாவட்டத்தில் மேதின நிகழ்வுகளில் பெரு மளவு மக்கள் உணர்வு பூர்வ மாகப் பங்கேற்றதுடன் ஊர் வலமும் சைக்கிள் பேரணிக ளும் இடம்பெற்றன. நேற்று முன்தினம் வவுனியா புளியங் குளம் இராமனார் சந்தியில் இருந்து ஆரம்பமான மேதின எழுச்சி ஊர்வலம் அங்கிருந்து புறப்பட்டு புளியங்குளம்பொது விளையாட்டு மைதானத்தைச் சென்றடைந்தது.

பல்லாயிரக்கணக்கான சிறு வர்கள், குழந்தைகள், வயோ திபர்கள் எனப் பலதரப்பட் டோரும் கலந்துகொண்ட இவ்வூர்வல முடிவில் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

இப்பொதுக்கூட்டத்தில் தமி ழீழ பொருண்மிய மேம்பாட் டுக்கழகம் நடத்திய உற்பத்தி எழுச்சி வாரத்தில்வெற்றி பெற்றோருக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன

### பத்திரிகைகள்

கேசரியை வெளியிடும் அசோ சியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒவ் சிலோன் நிறுவனத் தலை வர் நிறுவன ஊழியர்களை உடனடியாக வேலைக்கு வரும் படி வானொலிமூலம் அழைப்பு விடுத்தமை குறிப்பிடத்தக்கது.


## மரண அறிவித்தல்

வைத்திய கலாநிதி

இரத்தினசபாபதி பாக்கியநாதன் (J.P.)

வைத்திய கலாநிதி இ.பாக்கியநாதன் (J.P.) 2 05 93 நேற்று காலை காலமானார்.

இவர் திருநெல்வேலி கிழக்கு காலஞ்சென்ற வைத் திய கலாநிதி பொன்னையா இரத்தினசபாபதி திருமதி பாக்கியம் இரத்தினசபாபதி அவர்களின், அன்பு மகனும், திருமதி பா. புஸ்பராணியின் (ஊர்காவற்றுறை நீதிமன் றம்) அன்புக் கணவரும், செல்வன் விசாகன், செல்வன் சுகந்தன் (யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் இ கமலநாதன் (சட்டத்தரணி, திருமதி சிவகுமார் சரோஜினிதேவி (திருமலை), பொன் னையா, திருமதி விஜயராகவன் சசிதேவி லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் திருமதி கமலநாதன் பாமதி (கொழும்பு), திருமதி பொன்னையா இந்திராணி (ஆசிரியை, யா/ செங்குந்தா இந்துக்கல்லூரி), சி சிவகுமார் (ஆசிரியர், திருமலை). திரு. விஜயராகவன் [லண்டன்), திரு. து. சிறிகிருஷ்ணராசா (கனடா), திரு. து. சிறிகாந்தராசா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
இ. பொன்னையா (சகோதரர்)

'பொன்னையா வைத்தியசாலை'
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். (4806)